1993 டிசம்பர் 31]

(ஈ) நுண்ணறிவுத் திறத் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள், பணித் தொழில்கள் ஆகியவற்றின் மீதான வரி (திருத்தம் மற்றும் தனி வகை முறை) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993ஆம் ஆண்டு தமிழ்நாடு நுண்ணறிவுத் திறத் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள், பணித் தொழில்கள், ஆகியவற்றின் மீதான வரி (திருத்தம் மற்றும் தனி வகை முறை) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

*** மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி:** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

"1993ஆம் ஆண்டு தமிழ்நாடு நுண்ணறிவுத் திறத் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள், பணித் தொழில்கள் ஆகியவற்றின் மீதான வரி (திருத்தம் மற்றும் தனி வகை முறை) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(உ) தொழிலாளர் நல நிதிய (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிய (திருத்தச்) சட்ட முன்வடிவு, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

*** மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,